


**21. 09. 2025**

**தலைப்பு செய்திகள்**

1. **பிரதமர் திரு.நரேந்திரமோடி நாட்டுமக்களிடையே** இன்றுமாலை உரையாற்றுகிறார்.

2. **நாட்டில் உயர்கல்வி பயில்வோரின் எண்ணிக்கையை** அதிகரிக்க பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுவதாக மத்திய கல்வியமைச்சர் திரு.தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

3. **தூத்துக்குடியில் 55 ஆயிரம் பேர் வேலைவாய்ப்பை** பெறும் வகையில் 2 கப்பல் கட்டும் தளங்கள் அமைய உள்ளதாக முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

4. **மஹாளய அமாவாசை இன்று பக்திசிரத்தையுடன்** கடைபிடிக்கப்படுகிறது.

5. **துபாயில் நடைபெறும் ஆசிய கோப்பை 20-20** கிரிக்கெட் போட்டியின் 2-வது சூப்பர் 4 சுற்றில் இந்தியா இன்றிரவு பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

**இனி விரிவான செய்திகள்**

❖❖❖❖❖❖❖❖

**பிரதமர்**

பிரதமர் திரு.நரேந்திரமோடி நாட்டுமக்களிடையே இன்றுமாலை 5 மணிக்கு உரையாற்றுகிறார்.

பிரதமரின் உரை ஆகாஷ்வாணி மற்றும் தூர்தர்ஷனில் நேரலையாக ஒலிபரப்பப்படும்.

சரக்கு சேவை வரி சீர்த்திருத்தங்கள், நாளை முதல் அமலுக்கு வரவுள்ள நிலையில் பிரதமரின் உரை முக்கியத்துவம் பெறுகிறது.

❖❖❖❖❖❖❖❖

சரக்கு சேவை வரி

**பிரதமர் திரு. நரேந்திரமோடியின் அறிவிப்பிற்கு ஏற்ப** சரக்கு சேவை வரி சீர்த்திருத்தங்கள் நாளை முதல் நடைமுறைக்கு வரும் நிலையில், மக்களின் சுமையை குறைக்கும் வகையில், மோட்டார் வாகனங்கள் மற்றும் அவற்றின் உதிரிபாகங்கள் மீதான வரி
28 சதவிகிதத்திலிருந்து 18 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது.

இதனால் நுகர்வோரின் வாங்கும் திறன் அதிகரிப்பதோடு, நடுத்தர பிரிவு மக்கள் பெரிதும் பயனடைந்து வருகின்றனர்.

பல்வேறு தரப்பினர் இந்த வரி குறைப்பை வரவேற்றுள்ள நிலையில், தென்காசி மற்றும் ராணிப்பேட்டை மாவட்டத்தை சேர்ந்த பயனாளிகள் இதுகுறித்து எமது செய்திபிரிவிடம் தெரிவிக்கையில்

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖❖❖❖

தர்மேந்திர பிரதான்

**தேசிய கல்விக்கொள்கையில் தாய்மொழி கல்விக்கு** முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய கல்வியமைச்சர் திரு.தர்மேந்திரபிரதான் தெரிவித்துள்ளார்.

சென்னை IIT-யில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசியஅவர், நாட்டில் உயர்கல்வி பயில்வோரின் எண்ணிக்கையை அதிகரிக்க மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக கூறினார்.

காசி முதல் தென்காசி வரைலான மக்கள் ஒரே கலாச்சாரத்தை பின்பற்றுவதாக குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖

ராஜ்நாத்சிங்

**மத்திய பாதுகாப்பு துறை அமைச்சர்** திரு. ராஜ்நாத்சிங் 2 நாள் அரசுமுறை பயணமாக இன்று மொராக்கோ செல்கிறார்.

சுயசார்பு இந்தியா இயக்கத்தின் கீழ் பாதுகாப்பு தளவாட உற்பத்தியில் இருநாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்து அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சருடன் விரிவான ஆலோசனைகளை மேற்கொள்கிறார்.

மேலும் இருநாடுகளுக்கு இடையேயான பாதுகாப்பு புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கையெழுத்தாகும் என தெரிகிறது.

❖❖❖❖❖❖❖❖

பியூஷ்கோயல்

**இந்தியா - அமெரிக்கா வர்த்தக ஒப்பந்தம் குறித்த** பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு.பியூஷ்கோயல் தலைமையிலான இந்தியகுழு நாளை அமெரிக்கா செல்கிறது.

புதுதில்லியில் அமெரிக்க வர்த்தக குழுவுடன் அண்மையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் அடைந்ததையடுத்து வர்த்தக ஒப்பந்தத்தை இறுதி செய்ய திரு.பியூஷ்கோயல் அமெரிக்கா செல்லவுள்ளது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖❖❖

ராஜ்பூஷன் சௌத்ரி

**தூய்மை இருவார பிரச்சாரத்தின் ஒருபகுதியாக** போதைபொருள் இல்லா இந்தியாவை உருவாக்கும் நோக்கில் நாடுமுழுவதும் இன்று நடைபெற்ற நமோ இளையோர் ஓட்டத்தில் 10 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

புதுதில்லியில் இந்த மாரத்தான் ஓட்டத்தை தொடங்கிவைத்து பேசிய மத்திய ஜல்சக்தி துறை இணையமைச்சர் திரு.ராஜ்பூஷன் சௌத்ரி, போதைபொருள் பயன்பாட்டால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் உடல்பருமன் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இத்தகைய நிகழ்ச்சிகள் நடத்தப்படுவதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

**தூத்துக்குடியில் 55 ஆயிரம் பேர் வேலைவாய்ப்பை** பெறும் வகையில் 2 கப்பல் கட்டும் தளங்கள் அமைய உள்ளதாக முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள செய்தியில் கப்பற்கலையில் தமிழரின் வரலாற்றை பறைசாற்றும் வகையில் 30 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் இந்த கப்பல் கட்டும் தளங்கள் அமைக்கப்படவுள்ளதாக கூறினார்.

தென் தமிழகத்தின் வளர்ச்சிக்கு இது வழிகோலும் என்றும் அவர் கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

மஹாளய அமாவாசை

**இதனிடையே மஹாளய அமாவாசை தமிழகத்தில் இன்று** பக்திசிரத்தையுடன் கடைபிடிக்கப்படுகிறது.

திருச்சி ஸ்ரீரங்கம் அம்மா மண்டபம், திருவள்ளூர் வைத்திய வீரராகவ பெருமாள் கோவில் குளக்கரை, ஈரோடு பவானி கூடுதுறை, மயிலாடுதுறை பூம்புகார் சங்கமுக தீர்த்தம், குற்றாலம், திருச்செந்தூர் உள்ளிட்ட முக்கிய நீர்நிலைகளில் ஏராளமானோர் தங்கள் முன்னோர்களுக்கு நேர்த்திக்கடன் செலுத்தி வருகின்றனர்.

கன்னியாகுமரி திரிவேணி சங்கமம் கடற்கரையில் ஆயிரக்கணக்கானோர் நீராடி தங்கள் முன்னோர்களுக்கு தர்பணம் செய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

ராமேஸ்வரம் அக்னி தீர்த்தக்கடலில் பல்லாயிரக்கணக்கானோர் புனித நீராடியதோடு அருள்மிகு ராமநாதசுவாமி திருக்கோவிலில் 22 தீர்த்த குளங்களிலும் நீராடி நீண்ட வரிசையில் காத்திருந்து ராமநாத சுவாமி மற்றும் ஸ்ரீ பர்வதவர்த்தினி அம்பாளை வழிபட்டனர்.

மேட்டூர் அணையின் காவிரிபால படித்துறையில், ஏராளமானோர் புனிதநீராடி முன்னோருக்கு பச்சரிசிமாவு, எள், வாழைப்பழம் உள்ளிட்ட பொருட்களை படையலிட்டு வழிபட்டனர்.

ராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜாபேட்டை பாலாற்றங்கரையில் முன்னோர் வழிபாட்டில் ஏராளமானோர் ஈடுபட்டு வருகின்றனர்.

நாமக்கல் மாவட்டம் மோகனூர் அசலதீபேஸ்வரர் காவிரி ஆற்று படித்துறையில் திரளானோர் வழிபாடுகளை மேற்கொண்டனர்.

மயிலாடுதுறை காவிரி துலா கட்டத்தில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் தர்பணம் செய்து வழிபட்டனர்.

❖❖❖❖❖❖❖❖

சேகர்பாபு

**வரும் 2026 சட்டப்பேரவை தேர்தலில் திமுக** வெற்றிபெற்று ஆட்சியமைக்கும் என்று மாநில இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசியஅவர், தமிழகத்தை சேர்ந்த ஐயப்ப பக்தர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும், கேரள அரசு செய்துதரும் என அம்மாநில முதலமைச்சர் திரு.பிணராயி விஜயன் உறுதி அளித்துள்ளதாக கூறினார்.

மதுரை மீனாட்சி அம்மன் கோவில் குடமுழுக்கு விழா வரும் ஜனவரி மாதத்திற்குள் நடத்தப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖

**தங்கம்தென்னரசு**

**விருதுநகர் மாவட்ட பின்தங்கிய பகுதிகள்** பயன்பெறும் வகையில் பல்வேறு வளர்ச்சித்திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படுவதாக மாநில நிதியமைச்சர் திரு. தங்கம்தென்னரசு தெரிவித்துள்ளார்.

முதுகுளத்தூர் - வீரசோழன் சாலையில் 10 கோடியே 64 லட்ச ரூபாய் மதிப்பிலான உயர்மட்ட பாலப்பணிகளை இன்று தொடங்கி வைத்து பேசியஅவர், மதுரையிலிருந்து கொச்சி, கன்னியாகுமரி, தூத்துக்குடி, ராமேஸ்வரம் பகுதிகளை இணைக்கும் 4 வழிசாலைகள் மூலம் திருச்சுழி தொகுதி பொருளாதார வளர்ச்சியடையும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

❖❖❖❖❖❖❖❖

**இருவரி**

**காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள 4 ஏரிகளில்** மீன்பிடி உரிமைக்கான 3 ஆண்டுகால குத்தகைக்கு நாளைமுதல் வரும் 8-ம் தேதிக்குள் இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கலைச்செல்வி மோகன் தெரிவித்துள்ளார்.

**நாமக்கல் மாவட்டத்தில் உயர்கல்வி பயிலும்** மாணாக்கர் பிரதமரின் வித்யாலட்சுமி இணையதளத்தில் கல்விகடன் பெறுவதற்கான நடைமுறைகள் அந்தந்த கல்லூரிகளிலேயே மேற்கொள்ளப்படுவதாக மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் தெரிவித்துள்ளார்.

**சென்னை செங்கோட்டை இடையேயான பொதிகை** விரைவு ரயிலின் 21-ம் ஆண்டு விழாவை ஒட்டி செங்கோட்டையில் இன்று தென்காசி மாவட்ட ரயில் பயணிகள் சங்கம் சார்பில் கொண்டாடப்பட்டது.

❖❖❖❖❖❖❖❖

**மேட்டூர்**

**காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்துவரும்** மழை காரணமாக மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு இன்று வினாடிக்கு 11 ஆயிரத்து 397 கனஅடியாக அதிகரித்துள்ளது.

அணையிலிருந்து பாசனத்திற்காக 6 ஆயிரத்து 500 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் இன்று வினாடிக்கு 9 ஆயிரத்து 500 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது.

❖❖❖❖❖❖❖❖

தசரா விழா

தூத்துக்குடி மாவட்டம் குலசேகரபட்டின முத்தாரம்மன் கோவில் தசரா விழா நாளைமறுநாள் கொடியேற்றத்துடன் தொடங்குகிறது.

முக்கிய நிகழ்ச்சியான சூரசம்ஹாரம் அடுத்தமாதம் 2-ம் தேதி நடைபெறவுள்ளதையடுத்து பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் பாதுகாப்பு முன்னேற்பாட்டு பணிகள் குறித்து அனைத்து துறை அதிகாரிகளுடனான ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

❖❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

துபாயில் நடைபெறும் ஆசிய கோப்பை 20-20 கிரிக்கெட் போட்டியின் 2-வது சூப்பர் 4 சுற்றில் இந்தியா இன்றிரவு பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

இன்றைய ஆட்டத்தில் இந்தியா வெற்றிபெற்றால் வரும் 28-ம் தேதி நடைபெறும் இறுதி ஆட்டத்திற்கு நேரடியாக தகுதிபெறும்.

❖❖❖❖❖❖❖❖

பேட்மிட்டன்

ஷென்ஸெனில் நடைபெறும் சீன மாஸ்டர்ஸ் பேட்மிட்டன் போட்டியின் ஆடவர் இரட்டையர் இறுதியாட்டத்தில் இந்தியாவின் ரான்கிரெட்டி, சிராக்ஷெட்டி இணை – தென்கொரிய இணையை இன்று எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖